

புதுக்கோட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவுநாள் அமைதி ஊர்வலம் அண்ணா சிலையில் இருந்து ஊர்வலமாகச் சென்று மாவட்டக் கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் சிலைக்கு கழகத்தினர் மாலையிட்டு வணங்கினர். சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளருமான எஸ்.ரகுபதி, சுற்றுச் சூழல் அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், கழக இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர். கவிதைப்பித்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெரியண்ணன் அரசு, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, நகரச் செயலாளர் ஆ.செந்தில், அரு.வீரமணி, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், த.சந்திரசேகரன், சுபசரவணன், செ.அசோக் பாண்டியன், கே.ஆர். என்.போஸ், பி.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, ஞான.இளங்கோவன், எம்.லியாகத் அலி, கீரை.தமிழ்ராஜா மற்றும் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் வானூர் முன்னாள் ஒன்றிய குழுத் தலைவரும், கழக மூத்த முன்னோடியுமான பி.கே.திருக்காமு மற்றும் வானூர் ஒன்றிய குழுத் தலைவர் உஷா பி.கே.டி முரளி ஆகியோரை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி நேரில் சந்தித்து உடல்நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ., சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக் குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர் இளந்திரையன், ஒன்றியச் செயலாளர்கள் பி.கே.டி. முரளி, கே.எஸ்.ராஜி, மைதிலி ராஜேந்திரன், நகரச் செயலாளர் எஸ்.எஸ்.ஜெயமூர்த்தி, ஒன்றிய குழு துணை தலைவர் பருவகீர்த்தனா விநாயகமூர்த்தி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் அன்புமணி, பிரேமா குப்புசாமி, கௌதம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

கழகத் தலைவர் அவர்கள் வழிகாட்டுதலுடன் பெருமைமிகு இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாடு சேலத்தில் டிசம்பர் மாதம் நடைபெற உள்ளது. அந்த மாநாட்டைச் சிறப்பாக நடத்திட, கழக நிர்வாகிகள் பலரும் நிதி அளித்து வருகின்றனர். நிதி அளித்தவர்கள் விவரம் வருமாறு:–

| வ. எண் | பெயர், பொறுப்பு, கழக மாவட்டம் | தொகை (ரூ) |
|---|---|---|
| 1 | மதுரா செந்தில், மாவட்டச் செயலாளர், நாமக்கல் மேற்கு மாவட்டம். | 1,00,00,000 |
| 2 | மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் | 51,00,000 |
| 3 | சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 15,00,000 |
| 4 | சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 5 | சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 6 | சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 7 | சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 8 | சென்னை தென்மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள். | 10,00,000 |
| 9 | மருத்துவர் வீரபாண்டி ஆ.பிரபு, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், சேலம் கிழக்கு மாவட்டம். | 10,00,000 |
| 10 | ஆர்.டி.சேகர், கழக தணிக்கைக் குழு உறுப்பினர், பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். | 5,00,000 |
| 11 | இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர். | 2,00,000 |
| 12 | பி.எம்.சரவணன், மாநகர மேயர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், திருநெல்வேலி மத்திய மாவட்டம். | 1,00,000 |
| 13 | ஏ.எம்.ஜி.விஜய்குமார், அரியமங்கலம் பகுதிக் கழகச் செயலாளர், கிழக்கு மாநகரம், திருச்சி தெற்கு மாவட்டம். | 1,00,000 |
| | மொத்தம் | 2,35,00,000 |

"அன்பகம்"
சென்னை – 18.
நாள் : 08–08–2023.

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி

5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் – கர்ப்பிணிப் பெண்களுக்கு விடுபட்ட

# தடுப்பூசி தவணைகள் செலுத்தும் இந்திர தனுஷ் 5.0 - 2023 திட்டம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 9 -

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நேற்று முன்தினம் (07.08.2023) சென்னை, பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந் துத்துறை இயக்குநரகத்தில், 5 வயதிற்கு கீழ் உள்ள குழந்தை கள் மற்றும் கர்ப்பிணித் தாய் மார்களுக்கு விடுபட்ட தடுப் பூசி தவணைகள் செலுத்தும் இந்திரதனுஷ் தடுப்பூசி முகாம் 5.0 2023 தொடங்கி வைத்து, தடுப்பூசி செலுத்தும் பணியினை பார்வையிட்டு, விழிப்புணர்வு தகவல் தொடர்பு சாதனங்களான பதாகை, சுவரொட்டி, ஆடியோ, காணொளி, கிராம சுகாதார செவிலியர்களுக் கான தீவிர இந்திரதனுஷ் குறித்த விளக்கம், தவறிய தடுப்பூசி தவணை குறித்த விளக்கம், UWIN வளைதளத் தில் தடுப்பூசி சான்றிதழ் விளக்கம் ஆகியவை தொடர் பான சாதனங்கள் வெளி யிட்டு உரையாற்றி னார். அவர் ஆற்றிய உரை வரு மாறு;

தமிழ்நாட்டில் 1985ஆம் ஆண்டு முதல் நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் செயல்ப டுத்தப்பட்டு வருகிறது. நாடு தழுவிய தடுப்பூசி திட்டத்தின் கீழ் 11 வகையான தடுப்பூசி கள் (13 Antigens) அளிப்பதன் மூலம் 12 வகையான தடுப்பூ சியினால் தடுக்கப்படக்கூ டிய நோய்களிலிருந்து பாது காப்பு அளிக்கப்பட்டு வருகி றது. இத்திட்டத்தின் கீழ், ஆண்டுதோறும் சுமார் 10 இலட்சம் கர்ப்பிணித் தாய் மார்கள் மற்றும் 9.16 இலட் சம் பச்சிளம் குழந்தைகளுக்கு தடுப்பூசி தவணைகள் செலுத் தப்பட்டு வருகிறது.

கடந்த 2014 முதல் 4 கட் டங்களாக நடைபெற்றுள்ள தீவிர மிஷன் இந்திர தனுஷ் திட்டத்தின் மூலம் 1,72,365 கர்ப்பிணி தாய்மார்கள் மற் றும் 6,94,083 குழந்தைகளுக்கு 2,98,123 முகாம்களின் மூலம் விடுபட்ட தடுப்பூசி தவணை கள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 2023ம் ஆண்டு தீவிர மிஷன் இந்திர தனுஷ் 5.0 திட்டம் மூன்று சுற்றுகளாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்து. முதல் சுற்று 07.08.2023 முதல் 12.08.2023 வரையிலும், இரண்டாம் சுற்று 11.09.2023 முதல் 16.09.2023 வரையிலும், மூன்றாம் சுற்று 09.10.2023 முதல் 14.10.2023 வரையி லும், ஒவ்வொரு சுற்றும் 6 நாட்கள் நடத்தப்பட வுள்ளது.

தட்டம்மை மற்றும் ரூபெல்லா நோய் (Measles and Rubella) ஒழிப்பதற்கு ஒரு முக் கிய செயலாக கர்ப்பிணி தாய் மார்களுக்கும் மற்றும் 5 வய திற்குட்பட்ட குழந்தைகளுகு கும் விடுபட்ட/தவறிய தடுப் பூசி தவணைகளை அளிக்கும் வகையில் தீவிர மிஷன் இந் திர தனுஷ் 5.0 செயல்படுத் தப்படும்.

தமிழ்நாட்டில் 15.07.2023 முதல் 31.07.2023 வரை விடு பட்ட / தவணை தவறிய 5 வயதிற்குட்பட்ட குழந்தை கள் மற்றும் கர்ப்பிணித் தாய் மார்கள் ஆகியோரை கண்ட றிய வீடுவீடாக கணக்கெடுக் கும் பணி நடைபெற்றது. அதில் 72,760 குழந்தைகளும், 14,180 கர்ப்பிணித் தாய்மார் களும் என மொத்தம் 86,940 பேருக்கு தடுப்பூசி செலுத்தா மல் விடுபட்டுள் ளது என்று கண்டறியப்பட்டது.

இத்திட்டத்தில் தட் டம்மை மற்றும் ரூபெல்லா, நிமோனியா மற்றும் FlPV 3-வது தவணை ஆகிய தடுப்பூ சிகள் வழங்குவதற்கு முன்னு ரிமை அளிக்கப்படும். தீவிர மிஷன் இந்திர தனுஷ் 5.0 திட்டத்தில் மூன்று சுற்று களி லும் விடுபட்ட / தவணை தவறிய அனைத்து குழந்தை கள் மற்றும் கர்ப்பிணித் தாய் மார்கள் ஆகியோருக்கு செலுத்தப்படும் தடுப்பூசி விவரங்கள் UWIN வலைதளத் தில் பதிவேற்றம் செய்யப்ப டும். இதற்காக பிரத்யேகமாக தடுப்பூசி பிரிவில் (Immunization War room) அமைக்கப் பட்டு செயல்பட உருவாக் கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் அனைத்து 11 வகையான தடுப்பூசிகளும் போதிய அளவில் கையிருப் பில் உள்ளன. குறிப்பாக தட் டம்மை மற்றும் ரூபெல்லா தடுப்பூசிகள் 10.85 இலட்சம் டோசஸ் கையிருப்பில் உள் ளன என்று மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் உரையாற்றி னார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செய லாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், பெருநகர சென்னை மாநக ராட்சி கூடுதல் ஆணையர் (சுகாதாரம்)சங்கர்லால் குமா வத், பொது சுகாதாரம் மற் றும் நோய்த்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி. செல்வவிநாயகம், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.இரா.சாந்திம லர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கு நர் மரு.சண்முகக்கனி, கூடு தல் இயக்குநர் (ஆரம்ப சுகா தார நிலையம்) மரு.அ. சோமசுந்தரம், இணை இயக் குநர் (தடுப்பூசி) மரு.வினய் குமார் மற்றும் உயர் அலுவ லர்கள் கலந்து கொண்டனர்.



சேலம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் 5ம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி தந்தைபெரியார் சிலை அருகில் இருந்து மாவட்டக் கழக செயலாளர் இரா. இராஜேந்திரன் எம். எல்.ஏ. தலைமையில் அமைதி ஊர்வலமாக 'மாநகராட்சி அரசு மருத்துவமனை, பெரியார் மேம்பாலம் வழியாக அண்ணா பூங்கா சென்று தலைவர் கலைஞரின் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

குமாரபாளையத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு நாள்!

குமாரபாளையம் ஆக. 9

நாமக்கல் மேற்கு மாவட் டம் குமாரபாளையத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம்ஆண்டுநினைவுஅமைதி ஊர்வலம் நடைபெற்றது. நகர செயலாளர் செல்வம் ஞானசேகர்ஆகியோர்தலை மையில் பள்ளிபாளையம் ஒன்றிய திமுக செயலாளர் கள் இளங்கோவன், செல் வம், நாச்சிமுத்து ஆகியோர் முன்னிலையில்அமைதிஊர் வலம் நடைபெற்றது.

நகரின் முக்கிய வீதிகள் வழியாக அமைதி பேரணி நடைபெற்றது. தொடர்ந்து அலங்கரித்துவைக்கப்பட்டி ருந்த முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்குமலர் தூவி மரியாதை செலுத்தி னர். இதில் மாநில சொத்து பாதுகாப்பு உறுப்பினர் J.K.S.மாணிக்கம், மாநில தலைமை செயற்குழு உறுபி னர்வெங்கடாஜலம்மற்றும் O.R.செல்வராஜ், ஒன்றிய பொறுப்பாளர்கள் இளங் கோவன், செல்வம், நாச்சி முத்து, படைவீடு பேரூ ராட்சி ராமமூர்த்தி, ஆலாம்பாளையம் பேரூ ராட்சி கார்த்திராஜ், குமார பாளையம் நகர கழக பொறுப்பாளர்கள் செல் வம், ஞானசேகர், பள்ளிபா ளையம் நகர செயலாளர் குமார் மற்றும் சார்பு அணி தலைவர்கள் அமைப்பாளர் கள் துணை அமைப்பாளர் கள் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள், சார்பு அணிநிர் வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தரமணியில் உள்ள இன்ஸ்டியூட் ஆப் கேட்டரிங் மேனேஜ்மென்ட் கல்லூரியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அமுதகம் உணவக சமையலர்களுக்கான பயிற்சி முகாமை சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார். உடன் தமிழ்நாடு வளர்ச்சி கழக மேலாண்மை இயக்குனர், கல்லூரி முதல்வர், சமையலர் தாமோதரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# எழும்பூரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, ஆக.9 –

முத்தமிழறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை யொட்டி, கழக சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரு மான வழக்கறிஞர் இ.பரந்தாமன், எழும்பூர் தொகுதிக்குட்பட்ட 78 அ வட்டம், சூளை, பெரிய தம்பி தெரு சட்டண்ணன் தெரு சந்திப்பு, 99அ வட்டம், புரசைவாக்கம், டாக்டர் அழ கப்பா சாலை, 61ஆவது வட்டம், புதுப்பேட்டை, ஆதித்தனார் சாலை மற்றும் 108வது வட்டம், சேத்துப் பட்டு, மெக்நிக்கல்ஸ் சாலை ஆகிய நான்கு இடங்களில் ஏழை எளியோர், மாணவ–மாணவியர் உள்ளிட்ட 1,000 பேருக்கு அறு சுவை உணவு வழங்கினார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கோ. செங்குட்டுவன்

**ஆகஸ்ட் 9 (1996)**



பள்ளிப்பருவத்திலேயே திராவிட இயக்கக் கொள்கையினால் கவரப்பட்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

சென்னை மாவட்டக் கழக துணைச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்று, மாநகராட்சி மன்றத்தை கழகம் கைப்பற்றியபோது, தலைவர் கலைஞர் அவர்களுக்கு துணையாக இருந்து உழைத்தவர். அதற்காக அறிஞர் அண்ணா அவர்களின் அன்பையும், பாராட்டையும் பெற்றவர்.

சென்னை மாவட்ட தி.மு.க. மூன்றாவது மாநாடு 1959ல் நடைபெற்றபோது, அம்மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக இருந்து, மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியவர்.

கறுப்புக் கொடி, இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**